1971 மார்ச் 29]

(இ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒற்றைமாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்குப் பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ் பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு (Public Accounts Committee) உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 1—4—1971, வியாழக்கிழமை, முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 1—4—1971, வியாக்கிழமை மாலை 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2—4—1971, வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினறுக்கு மேற்படுமாயின் 3—4—1971, சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

(4) 1971-72-ம் ஆண்டுக்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1971-72-ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின்மீதான பொது விவாதம் தொடரும். இப்பொழுது திரு. எ. சுவாமிதாஸ் அவர்கள் பேசலாம்.

***திரு. எ. சுவாமிதாஸ்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1971-72-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின்மீது விவாதம் நடக்கும்போது, பொதுவாகப் பார்த்தால், இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அந்த நிதி நிலை அறிக்கையைப்பற்றிக் குறிப்பிடுவதற்குமுன்பு, தேர்தலைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். தேர்தலைப்பற்றி அவர்கள் குறிப்பிடும்போது, தேர்தல் முன்பின் நடந்த வன்முறைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நடந்த வன்முறைகளை அவர்கள் குறிப்பிட்ட காரணத்தினுல் நானும் என்னுடைய தொகுதியில் ஏற்பட்ட வன்முறைகளைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். பரவலாகப் பார்க்கும்போது, வன்முறைகள் ஏற்படாத தொகுதியே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இதற்கு முன்னுல் 1962, 1967 முதலிய ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் இத்தகைய வன்முறைச் செயல்கள் நடந்தது கிடையாது. ஆகவே, மேலும் தேர்தல்கள் நடக்கும்போது இந்தமாதிரி வன்முறைகள் நடக்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டியது அரசினுடைய கடமையாகும்.